அனைத்து பதிப்புரிமைகளையும் உடையது

# மூன்றாம் நிலைகல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
## அறிவுசார் மதிப்பீடு – ஆகஸ்ட் 2023
## பராமரிப்பாளர்
## தேசிய தொழிற் தகைமை மட்டம் 04

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்
- 1 முதல் 50 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும், சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என்று நீங்கள் கருதும் (a), (b), (c), (d) ஆகிய விடைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
- தரப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாக்கள் தொடர்பாகவும் நீர் தேர்வு செய்துள்ள விடைக்கான இலக்குடன் பொருந்தும் கூட்டில் (X) என்ற அடையாளத்தினை இடவும்.
- இந்த வினாத்தாள் எட்டு (08) பக்கங்களைக் கொண்டது

---

**பகுதி 1**

1. வாய்வழி தூய்மை (Oral hygiene) என்பது பின்வரும் எதனை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் நடைமுறைகளை உள்ளடக்கியது

   a) பற்கள்
   b) நாக்கு
   c) பல்முரசு (Gum)
   d) மேற்கூறிய அனைத்தும்

2. தீவிர இதய செயலிழப்புடன் உள்ள 75 வயதான நோயாளியை பராமரிப்பாளர் (Caregiver) கவனித்து வருகிறார். மூன்றாவது நாளில் அவரின் தனிப்பட்ட தூய்மையைப் (personal hygiene) பராமரிக்கும் போது என்ன வகையான குளியல் செய்ய வேண்டும்?

   a) படுக்கை குளியல் (Bed bath)
   b) டவல் குளியல் (Towel bath)
   c) பகுதியளவு குளியல் (Partial bath)
   d) ஷவர் குளியல் (Shower bath)

3. தடிப்பான நிறமாற்றமடைந்த (thick discolored) நகங்களைக் கொண்ட நீரிழிவு நோயாளியை நீங்கள் கவனித்துக் கொண்டிருக்கும் போது நகங்களை எவ்வாறு சுத்தம் செய்வீர்கள்?

   a) வெதுவெதுப்பான நீரில் நகங்களை சுத்தம் செய்தல்
   b) சுத்தமான துணியால் நகங்களை சுத்தம் செய்தல்
   c) நோயாளியின் நகத்தை கழுவி ஒழுங்குபட வெட்டி நேர்த்தியாக்குதல்
   d) பாதமருத்துவரின் (podiatrist) சேவைகளை நாடுதல்

4. விபத்தில் சிக்கி கை முறிந்த ஒரு பெண் வாடிக்கையாளரை பராமரிப்பாளர் கவனித்து வருகிறார். வாடிக்கையாளரின் தலைமுடியை எவ்வாறு பராமரிக்க வேண்டும்?

   a) முடியை நீண்ட நேரம் தேய்த்தல்
   b) உச்சியிலிருந்து முடி சீவுதலை தொடங்குதல்
   c) முடியை ஒரு “bun” இல் கட்டுதல்
   d) முடியை மெதுவாகவும் கவனமாகவும் தூரிகை (Brush) செய்தல்.

5. பராமரிப்பாளர் குறைந்த நடமாட்டமுடைய (mobility) ஒரு வயதான வாடிக்கையாளரை கவனித்து வருகிறார். அவர் தனது மூக்குக் கண்ணாடியை சுத்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டார். மூக்குக் கண்ணாடியை சுத்தம் செய்ய பின்வரும் முறைகளில் எது பயன்படுத்தப்படுகிறது?

a) மூக்குக் கண்ணாடியின் இருபுறமும் ஓடுகின்ற வெதுவெதுப்பான நீரால் உலர்ந்த கம்பளி துணியைப் (dry woolen cloth) பயன்படுத்தி சுத்தம் செய்தல்
b) மூக்குக் கண்ணாடியை ஓடும் நீராலும் மற்றும் உலர்ந்த காகிதத் துணியைப் (dry tissue) பயன்படுத்தி சுத்தம் செய்தல்
c) மூக்குக் கண்ணாடியின் இருபுறமும் ஓடுகின்ற வெதுவெதுப்பான நீரால் ஓர் உலர்த்தியைப் பயன்படுத்தி சுத்தம் செய்தல்
d) மூக்குக் கண்ணாடியின் இருபுறமும் ஓடுகின்ற வெதுவெதுப்பான நீரால் உலர்ந்த மென்மையான துணியைப் பயன்படுத்தி சுத்தம் செய்தல்

6. ஒரு பராமரிப்பாளர் நோயாளியின் நாடித்துடிப்பைப் பெற்று, வீதம் (rate) இயல்பை விட குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். ஒரு பராமரிப்பாளர் தான் கண்டதை எவ்வாறு ஆவணத்தில் (Document) குறிப்பிட வேண்டும்?

a) டச்சிப்னியா (Tachypnea)
b) ஹைப்பர் பைரெக்ஸியா (Hyper pyrexia)
c) பிராடி கார்டியா (Bradycardia)
d) டாக்ரிக்கார்டியா (Tachycardia)

7. ஒரு வாடிக்கையாளருக்கு நாற்காலியில் எழுந்திருக்க உதவும் போது பரந்த அடிப்படை ஆதரவைப் (wide base support) பயன்படுத்துவதற்கு பின்வரும் எந்தச் செயலை பராமரிப்பாளர் ஆற்றுவார்?

a) இடுப்பை வளைத்து வாடிக்கையாளரின் கைகளின் கீழ் கைகளை வைத்து உயர்த்துதல்
b) வாடிக்கையாளரின் பக்கம் பார்த்துக்கொண்டு முழங்கால்களை வளைத்து வாடிக்கையாளரின் முன்னங்கையில் கைகளை வைத்து உயர்த்துதல்
c) அவரது கால்களை விரித்து வைத்தல்
d) அவரது இடுப்பு தசையை இறுக்குதல்

8. விபத்தைத் தொடர்ந்து வாடிக்கையாளருக்கு வாய்வழி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது தோல் சூடாகவும் சிவப்பாகவும் இருந்தது. வாடிக்கையாளரின் உடல் வெப்பநிலையை சரிபார்க்க எந்த முறை சிறந்தது?

a) வாய்வழி (Oral)
b) கக்கம்/ கமக்கட்டு (Axillary)
c) குதவழி (Rectal)
d) கவடு (Groin)

9. ஒரு மயக்கமடைந்த வாடிக்கையாளருக்கு நான்கு மணிநேர வாய் பராமரிப்பு (mouth care) தேவைப்படுகிறது. வாய் பராமரிப்பு செய்யும் போது சிறந்த நிலை (best position),

a) பவ்லரின் நிலை (Fowler's position)
b) பக்கவாட்டாக கிடத்தல் (Side lying)
c) மல்லாந்து கிடத்தல் (Supine)
d) தலையை தாழ்த்தல் (Head low)

10. ஒரு வயதான வாடிக்கையாளர் முதன் முறையாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒரு பராமரிப்பாளராக நீங்கள் மேற்கொள்ளும் பின்வரும் எந்த நடவடிக்கை நோயாளியின் பாதுகாப்பை உறுதி செய்கிறது?

a) தேவையற்ற தளபாடங்களை அப்புறப்படுத்தி வைத்திருத்தல்
b) பக்கக் கிராதிகளை (side rails) எப்போதும் மேலேயே வைத்திருத்தல்
c) எல்லா நேரமும் இடத்தை வெளிச்சமாக வைத்திருத்தல்.
d) அனைத்து உபகரணங்களையும் பார்வைக்கு புலப்படாமல் வைத்திருத்தல்

11. பின்வருவனவற்றில் மாஸ்லோவின் தேவைகளின் படிநிலையைச் (Maslow's hierarchy of needs) சேர்ந்தது எது?

a) அன்பு மற்றும் உடைமை (Love and belonging)
b) உடலியற் தேவைகள் (Physiologic needs)
c) தன்னாற்றலை உணர்தல் Self-actualization
d) மேற்கூறிய அனைத்தும்

12. பின்வருவனவற்றில் பராமரிப்பாளரின் (care giver) முக்கியப் பாத்திரம் (role )எது?

a) தனிப்பட்ட தூய்மையைப் (personal hygiene) பராமரிக்க உதவுதல்
b) அன்றாட நடவடிக்கைகளில் யாருக்கு உதவி தேவை என்பதைக் கவனித்தல்
c) நல்வாழ்வைப் (wellness) பராமரிக்க உதவுதல்
d) பலனுள்ள சுகாதார நுகர்வோராக வாடிக்கையாளருக்குக் கற்றுக்கொடுத்தல்

13. இல்ல பராமரிப்பு நிலைய (Home care center) பராமரிப்பாளர் மருந்தை வழங்குவதற்கு முன் நோயாளியின் அடையாளத்தை சரிபார்க்க வேண்டும். பின்வருவனவற்றில் நோயாளியை அடையாளம் காண பாதுகாப்பான வழி எது?

a) அறை இலக்கத்தைச் சரிபார்த்தல்
b) நோயாளியின் அடையாளக் குறியைச் (identification band) சரிபார்த்தல்
c) வாடிக்கையாளரிடம் அவரது பெயர் மற்றும் முகவரியை பாதுகாவலரிடம் அவரது கேட்டல்
d) நோயாளியின் பெயரை உரக்கக் கூறி அதை மீண்டும் வாடிக்கையாளரை கூறுமாறு சொல்லுதல்

14. பராமரிப்பாளர் " sublingual medication" ஐ வழங்கத் தயாராகிறார். மருந்து வைக்கப்பட வேண்டிய இடம்,

a) வாடிக்கையாளரது தோலில்
b) வாடிக்கையாளரது நாக்கின் கீழ்
c) வாடிக்கையாளர்களின் கன்னங்கள் மற்றும் ஈறுகளுக்கு இடையில்.
d) வாடிக்கையாளரின் நாக்கில்.

15. நீங்கள் எனிமாவை (enema) செலுத்த வேண்டும். இந்த செயல்முறைக்கு (procedure) பொருத்தமான நிலை,

a) குப்புறப்படுத்தல் (Prone)
b) மல்லாந்துகிடத்தல் (Supine)
c) முதுகுப்பக்க கிடைநிலை (Dorsal recumbent)
d) சிம்ஸ் இடது பக்கவாட்டு (Sims left lateral)

16. பின்புற பராமரிப்பு (Back care) சிறப்பாக விபரிப்பதென்பது,

a) பின்புறத்தை கழுவுதல்
b) பின்புறத்தை பராமரித்து வருடி விடுதல் (massage)
c) பினபுறத்தில் கிரீம் தடவுதல்
d) பின்புறத்தில் சூடான அழுத்தத்தைப் (hot compression) பிரயோகித்தல்

17. பின்வருவனவற்றில் எது கை கழுவுதலின் மிக முக்கியமான நோக்கமாகும்?

a) சௌகரியத்தை (comfort) வழங்குதல்
b) அழுக்கு கைகளால் வாடிக்கையாளரைத் தொடுவதைத் தவிர்த்தல்
c) நுண்ணுயிரிகளின் (microorganism) பரிமாற்றத்தைத் தடுத்தல்
d) ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்

18. அமர்த்தப்பட வேண்டிய படுக்கையைத் (occupied bed) தயாரிப்பதற்கு முன்பு படுக்கை துணி ஏற்பாட்டின் (bed linen arrangement) அவசியத்தை நோயாளிக்கு விளக்குவதற்கான காரணம்,

a) அவருக்கு தனிமையை/ மறைப்பு நிலை (privacy) வழங்குதவதற்கு
b) அவருக்கு தூசி பரவுவதை தடுப்பதற்கு
c) அவரது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு
d) அவரது ஒத்துழைப்பை எளிதாக்குவதற்கு

19. படுக்கையில் குளியல் சுத்தம் (cleansing bed bath) செய்வதன் மிக முக்கியமான நோக்கம்;

a) வாடிக்கையாரை சுத்தப்படுத்தி, புத்துணர்வையளித்து சௌகரியத்தை வழங்குவதற்கு
b) படுக்கையில் குளியல் திறனை வளர்த்துக் கொள்வதற்கு
c) வலியைப் போக்குவதற்கு
d) ஆளிடையான தொடர்பு (interpersonal relationship)

20. அனைத்து நோயாளிகளுக்கும் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் அனைத்து நோயாளிகளின் பராமரிப்பிலும் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய நியம முன்னெச்சரிக்கைகளாக (essential standard precautions) இல்லாதது பின்வருவனவற்றுள் எது?

a) கை சுத்தம் (Hand hygiene)
b) முறையற்ற கூர்மை மற்றும் கழிவு அகற்றல் (Improper sharps and waste disposal)
c) தனிப்பட்ட காப்பு உபகரணங்கள் (Personal protective equipment)
d) தொற்றுநீக்கல் நுட்பம் (Aseptic technique)

21.பின்வருவனவற்று ஒன்றைத் தவிர மற்றைய அனைத்தும் நோயாளிகளின் பொறுப்புகளாகும். அது,

a) மருத்துவமனை விதிகளையும் ஒழுங்குமுறைளையும் (rules and regulations) பின்பற்றுதல்
b) அறிவுறுத்தல்களுக்கு இணங்குதல்
c) தகவல்களை வழங்குதல்
d) வெவ்வேறு வகையான கவனிப்பை/ பராமரிப்பை கொடுத்தல்

22. ஒரு பெண் நோயாளிக்கு பெரினியல் பராமரிப்பை (perineal care) ஆற்றும் செயல்முறைக்கு சிறந்த நிலை எது?

a) இடது பக்கவாட்டு (Left lateral)
b) மல்லாந்துகிடத்தல் (Supine)
c) முதுகுப்பக்க கிடைநிலை (Dorsal recumbent)
d) குப்புறப்படுத்தல் (Prone)

23. ஆரோக்கியமான வயது வந்தவருக்கு (healthy adult) பின்வரும் முக்கிய அறிகுறிகளில் (vital sign) எது அசாதாரணமான கண்டுபிடிப்பைக் (abnormal finding) குறிக்கிறது?

a) இரத்த அழுத்தம் 120/80 mmHg
b) துடிப்பு நிமிடத்திற்கு 60
c) சுவாசம் நிமிடத்திற்கு 14.
d) வெப்பநிலை $38^{0}$C

24. சுவாசிப்பதில் சிரமம் உள்ள வாடிக்கையாளரை பராமரிப்பாளர் கவனித்துக்கொள்கிறார். பின்வரும் நிலைகளில் எது அதிக அளவு காற்றை (Air) பரிமாற அனுமதிக்கிறது?

a) மல்லாந்து படுத்திருக்கிற நிலையில் (Supine position)
b) பவ்லரின் நிலை (Fowler's position)
c) சிம்ஸின் நிலை (Sim's position)
d) இடது பக்கவாட்டு (Left lateral)

25. நோயாளியின் நாடித்துடிப்பு வீதத்தை நீங்கள் மதிப்பிடும்போது, துடிப்பு வீதம் நிமிடத்திற்கு 60க்கு குறைவாக இருப்பதைக் கண்டீர்கள். அதை நீங்கள் எப்படி பதிவு செய்வீர்கள்?

a) டாக்ரிக்கார்டியா (Tachycardia)
b) டச்சிப்னியா (Tachypnea)
c) பிராடி கார்டியா (Bradycardia)
d) பிராடிப்னியா (Bradypnea)

26. இரத்த ஓட்டத்தில் ஒக்ஸிஜன் பற்றாக்குறை உள்ளதெனில் அது,

a) ஹைபோக்ஸீமியா (Hypoxemia)
b) அஸ்பைக்ஸியா (Asphyxia)
c) அனோக்ஸியா (Anoxia)
d) சயனோசிஸ் (Cyanosis)

27. நீலம் அல்லது சாம்பல் தோல் அல்லது உதடுகள் என அழைக்கப்படுவது;

a) அனோக்ஸியா (Anoxia)
b) சயனோசிஸ் (Cyanosis)
c) அசிடோசிஸ் (Acidosis)
d) அஸ்பைக்ஸியா (Asphyxia)

28. சுவாசத்தின் மொத்த நிறுத்தம் (Total cessation of breathing) என அழைக்கப்படுவது;

a) அப்னியா (Apnea)
b) பிராடிப்னியா (Bradypnea)
c) ஆர்த்தோப்னியா(Orthopnea)
d) டச்சிப்னியா (Tachypnoea)

29. வாயின் சீதமென்சவ்வு வீக்கம் (Inflammation of the mucous membrane);

a) ஸ்டோமாடிடிஸ் (Stomatitis)
b) இரைப்பை அழற்சி Gastritis
c) சீலோசிஸ் (Cheilosis)
d) குடல் அழற்சி (Enteritis)

30. மருத்துவமனை வாங்கிய தொற்று என அழைக்கப்படுவது;

a) சிறுதுளித்தொற்று (Droplet infection)
b) சந்தர்ப்பவாத தொற்று (Opportunistic infection)
c) நோசோகோமியல் தொற்று (Nosocomial infection)
d) மாசுபடுதல் (Contamination)

31. நாள இரத்தப்போக்கை (vein bleeding) எவ்வாறு அடையாளம் காண முடியும்?

a) காயத்திலிருந்து இரத்தம் சமமாக வெளியேறுதல்
b) காயத்திலிருந்து துடிப்புடன் இரத்தம் பாய்தல்
c) காயத்திலிருந்து இரத்தம் மெதுவாக வெளியேறுதல்
d) இரத்தம் மிக மெதுவாக பாய்தல்

32. மறுபாதுகாப்பின்மைத் தாக்கத்திற்கு (Anaphylactic shock) யாது காரணம்?

a) மூச்சடைப்பு (Choking)
b) பூச்சிக் கடி அல்லது சிலந்திக் கடி
c) 3 வது டிகிரி தீக்காயம் ($3^{rd}$ degree burn)
d) பக்கவாதம் (Stroke)

33. நீங்கள் முதலுதவி செய்யும்போது உங்கள் முதல் நடவடிக்கை யாது?

a) சுவாசத்தை (மூச்சு விடுதல்) சரிபார்த்தல்
b) வெளிப்புற காயங்களை சரிபார்த்தல்
c) பாதிக்கப்பட்டவரிடம் பேசுதல் மற்றும் அவரது தோற்பட்டைகளை ஆட்டுதல் (shake)
d) முக்கிய அறிகுறிகளை (vital signs) சரிபார்த்தல்

34. நீங்கள் கவனிப்பை வழங்கும்போது உங்களது வாடிக்கையாளர் குறுகிய கால மயக்கம் தாக்குதலை (short period fainting attack) அனுபவிக்கிறார். நீங்கள் எடுக்க வேண்டிய முதன்மை நடவடிக்கை;

a) பாதிக்கப்பட்டவரிடம் பேசி மற்றும் வலி நிவாரணிகளை (painkillers) வழங்குதல்
b) பாதிக்கப்பட்டவர் நாற்காலியிலேயே இருக்க விடுதல்
c) பாதிக்கப்பட்டவரை படுக்க வைத்து, நம்பிக்கையை மீளஎழுப்பி சுத்தமான காற்றை வழங்குதல்
d) வாடிக்கையாளரை அசைத்தல்/ ஆட்டுதல் (shake)

35. பார்வை இழப்புள்ள வயதான நோயாளிக்கு நீங்கள் அவரை நடக்க உதவுகையில்,

a) அவரை அங்கும் இங்கும் செல்ல அனுமதிக்காதீர்கள்
b) தேவையான உதவிகளை வழங்கி அவற்றை பதிவு செய்யவும்
c) அவரை வழிநடத்துவதற்கு காத்திருக்கச் சொல்லுங்கள்
d) அவர் சுதந்திரமாக நடமாட விடுங்கள்

36. மஞ்சள் காமாலை நோய் (Jaundice) என்றால்;

a) சிறுநீரில் அதிக பிலிரூபின் (bilirubin) ஆகும்
b) தோல், சீதமென்சவ்வு (mucous membrane) மற்றும் விழிவெண்படலத்தில் (sclera) மஞ்சள் நிறமாற்றம் ஆகும்
c) தோல் மஞ்சள் நிறமாற்றம் ஆகும்
d) சிறுநீரின் மஞ்சள் நிறமாற்றம் ஆகும்

37. பின்வருவனவற்றில் எது குழந்தைகளின் கடுமையான நீரிழப்புக்கான அறிகுறி அல்ல?

a) சோம்பல் அல்லது மயக்கம்
b) தோல் கிள்ளு (skin pinch) உடனடியாக திரும்புதல்
c) குடிக்கவோ அல்லது போதியளவு குடிக்கவோ (drink or drinking poorly) முடியவில்லை
d) குழி விழுந்த கண்கள் (Sunken eyes)

38. கர்ப்பகால நீரிழிவு நோய் (Gestational Diabetic Mellitus (GDM)) உள்ள தாயிடமிருந்து 3.8 கிலோ உடல் எடையுள்ள பிறந்த குழந்தைக்கு ஏற்படும் உடனடிச் சிக்கல் (immediate complication);.

a) அதிக இரத்த அழுத்தம் (Hypertension)
b) தாழ் குருதி அழுத்தம் (Hypotension)
c) இரத்த சர்க்கரைக் மிகைப்பு (Hyperglycemia)
d) இரத்தச் சர்க்கரைக் குறைவு (Hypoglycemia)

39. கூகைக்கட்டு நோயுள்ள குழந்தைகளிடமுள்ள பொதுவான சிக்கல்,

a) அண்டவாதம் (Orchitis)
b) மூட்டுவாதம் (Arthritis)
c) இதையத் தசையழற்சி (Myocarditis)
d) வாயழற்சி (Stomatitis)

40. விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு விசேட கல்வி அவசியம் ஏனெனில்,

a) எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியாகக் கற்பதில்லை
b) குறைந்த சாதனையாளர்கள் பிரிக்கப்பட வேண்டும்
c) மாற்றுத்திறனாளி (disability) பிள்ளைகள் சாதாரண பாடசாலையில் படிக்க முடியாது
d) விசேட பிள்ளைகள் வேறுபட்டவர்கள்

41. எடை குறைந்த பிறப்பு என்பதன் பொருள்:

a) குறைமாதத்தில் பிறந்த குழந்தை ஆகும்
b) பிறப்பு எடை 2.8 கிலோ ஆகும்
c) பிறப்பு எடை 2.5 கிலோவுக்கும் குறைவாகும்
d) பிறப்பு எடை 3.5 கிலோவுக்கும் குறைவாகும்

42. கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தும் தாய்க்கு பின்வருவனவற்றில் எதைச் சாதிக்க ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் மாத்திரையை எடுக்க வேண்டும் என்று பராமரிப்பாளர் தாய்க்குத் தெரிவிக்கிறார்?

a) குமட்டல் (nausea) நிகழ்வுகளைக் குறைத்தல்
b) ஹார்மோன் அளவை (hormonal levels) பராமரித்தல்
c) பக்க விளைவுகளை (side effects) குறைத்தல்
d) மருந்து உள்வினைகளைத் (drug interactions) தடுத்தல்

43. எந்த வளர்ச்சி மைல்கல் (Milestone) முதலில் இடம்பெறும்?

a) கண்ணாடி நாடகம் (Mirror play)
b) தவழ்தல் (Crawling)
c) ஊர்ந்து செல்லல் (Creeping)
d) விரல் பற்றுதல் (Finger grasp)

44. பின்வரும் குறிகாட்டிகளில் (indicators) எது வளர்ச்சி கண்காணிப்புக்கு (growth monitoring) பயன்படுத்தப்படுகிறது?

a) வயதுக்கு ஏற்ற உயரம் (Height for age)
b) தலை சுற்றளவு (Head circumference)
c) வயதுக்கு ஏற்ற எடை (Weight for age)
d) எடைக்கு ஏற்ற உயரம் (Height for weight)

45. குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதால் பின்வரும் எந்நோய் ஏற்படலின் சாத்தியப்பாடு குறைவாகும்?

a) வயிற்றுப்போக்கு (Diarrhea)
b) காது தொற்று (Ear infection)
c) நியுமோனியா (Pneumonia)
d) மேற்கூறிய அனைத்தும்

46. தாய்ப்பாலை உருவாக்க பெண்களின் உடலில் பயன்படுத்தும் மிக முக்கியமான ஹார்மோன் எது?

a) ஈஸ்ட்ரோஜன் (Estrogen)
b) ப்ரோலாக்டின் (Prolactin)
c) புரோஜெஸ்ட்டிரோன் (Progesterone)
d) இன்சுலின் (Insulin)

47. தாய்ப்பால் கொடுக்கும் போது குழந்தைக்கு போதுமான பால் கிடைக்கிறதா என்று எப்படிக் கூறமுடியும்?

a) ஒரு நாளைக்கு குறைந்தது ஆறு (06) ஈரமான டயப்பர்கள் இருத்தல்
b) ஒவ்வொரு நாளும் பல மலங்கழிப்புகள் (bowel movements) இடம்பெறுதல்
c) குழந்தையின் எடை சீராக அதிகரித்தல்
d) மேற்கூறிய அனைத்தும்

48. ஆளிடையான தொடர்பைப் (interpersonal relationship) பேணுவதற்கு பின்வரும் முக்கியமான திறன்களில் எது தேவை?

a) கவனிக்கும் திறன் (Observation skill)
b) அறிக்கை செய்யும் திறன் (Reporting skill)
c) தொடர்பாடல் திறன் (Communication skill)
d) சுகாதார கல்வி திறன் (Health education skill)

49. பசும்பாலுடன் ஒப்பிடுகையில் தாய்ப்பாலில் என்ன இருக்கிறது?

a) அதிக புரதம்
b) குறைவான கார்போஹைட்ரேட்
c) அதிக இரும்புச்சத்து
d) குறைவான விட்டமின்கள்

50. இனப்பெருக்க உறுப்புகள் (Reproductive organs) எதன் போது முதிர்ச்சி (maturity) அடைகின்றன?

a) மாதவிடாய் (Menstruation)
b) கர்ப்ப காலம் (Gestation period)
c) இளமைப் பருவம் (Adolescence period)
d) மேற்கூறிய எதுவும் இல்லை

(01 x 50 = 50 புள்ளிகள்)

அனைத்து பதிப்புரிமைகளையும் உடையது

# மூன்றாம் நிலைகல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
## அறிவுசார் மதிப்பீடு – ஆகஸ்ட் 2023
## பராமரிப்பாளர்
## தேசிய தொழிற் தகைமை மட்டம் 04

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- முதலாவது (01) வினா உட்பட ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக. (முதலாவது (01) வினா கட்டாயமாவதுடன் விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஐந்து (05) ஆகும்)
- இப் பகுதி தொடர்பாக விடையளிப்பதற்கு வினாத்தாளில் தரப்பட்டுள்ள இடங்களைப் பயன்படுத்தவும்.
- இவ் வினாத்தாள் 06 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

**பகுதி 2**

1.

i). படுக்கை தயார்படுத்தலின் (bed making) ஆறு (06) நோக்கங்களை பட்டியலிடுக.

(03 புள்ளிகள்)

ii). 80 வயதான வாடிக்கையாளர் திருமதி சில்வா, இடது காலின் பெருவிரலில் பெரிய காயம் ஏற்பட்டு முதியோர் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயம் சாம்பல் நிறம் மற்றும் துர்நாற்றம் மற்றும் வலியற்றது என்று அவர் வெளிப்படுத்துகிறார். திருமதி. சில்வாவின் பராமரிப்பாளராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள், பின்வரும் தலைப்புகளின்படி இந் நோயாளிக்கு வாழும் இடத்தை நீங்கள் எவ்வாறு ஏற்பாடு செய்கிறீர்கள் என்பதை விளக்குக.

a)படுக்கை (Bed)

(02 புள்ளிகள்)

b)அலகு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி (Unit and surrounding area)

(03 புள்ளிகள்)

c)கழுவலறை (Wash room)

(02 புள்ளிகள்)

2.

i). நான்கு (04) பொதுவான விஷ வகைகளை பட்டியலிடுக.

(02 புள்ளிகள்)

ii). விஷங்கள் உடலில் நுழையக்கூடிய நான்கு (**04**) முக்கிய வழிகளைக் கூறுக.

(02 புள்ளிகள்)

iii). ஆபத்தான பூச்சிகளின் (dangerous insects) நான்கு (04) வகைகளை பட்டியலிடுக.

(02 புள்ளிகள்)

iv). பூச்சிக் கடியானது ஒவ்வாமை நிலைக்கு வந்து அனாபிலாக்ஸிஸ்/ கடும் ஒவ்வாமை (Anaphylaxis) நோயைப் ஏற்படலாம்.

(02 புள்ளிகள்)

v). உங்கள் முதலுதவிகளை (first aids) பட்டியலிடுக.

(02 புள்ளிகள்)

3.

i). பெடிகுலோசிஸ் (pediculosis) என்பதன் பொருளை விளக்குக.

(02 புள்ளிகள்)

ii). பெடிகுலோசிஸ் (pediculosis) ஆபத்தை பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

iii). நீங்கள் ஒரு பராமரிப்பு நிலையத்தின் பராமரிப்பு வழங்குபவர். நோயாளியை குறுக்கு நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்க எடுக்கு நான்கு தடுப்பு நடவடிக்கைகளை (prevention measures) பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

4.

i). சாதாரண பிறப்புறுப்புப் பிரசவத்திற்குப் பிறகு திருமதி. பெரேரா டிஸ்சார்ஜ் செய்யப்படுகிறார். இவருக்கு ஏற்கனவே ஒன்றரை வயது குழந்தையொன்றும் உள்ளது. அவருடைய தாயால் அவருக்கு உதவுவதும் கடினமாக உள்ளது; எனவே, அவருக்கு ஒரு உதவியாளர் தேவைப்படுகிறது. இரண்டாம் நாள் மயக்கம் அடைந்து ரத்தம் கொட்டியதாக அவர் புகார் கூறுகிறார். ஒரு உதவியாளராக, அவளுடைய இரத்தப்போக்கு சாதாரணமாக இல்லை என்பதை நீங்கள் கவனித்தீர்கள். இந்த நிலைமையைக் குறிப்பிட்டு விளக்குக.

(03 புள்ளிகள்)

ii). இந்த நிலைமையுடன் தொடர்புடைய இரண்டு **(02)** காரணங்களை பட்டியலிடுக.

(01 புள்ளி)

iii). இந்தத் தாயைக் கவனிக்கும் உங்களின் இரண்டு **(02)** பொறுப்புகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

iv). குழந்தைக்கும் தாய்க்கும் தாய்ப்பாலின் ஆறு **(06)** நன்மைகளைக் குறிப்பிடுக.

a) குழந்தைக்கு (For baby)

b) தாய்க்கு (For mother)

(04 **புள்ளிகள்**)

5.

i). கைக்குழந்தை (infant) என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

(02 புள்ளிகள்)

ii). ஒரு கைக்குழந்தைக்கு திட உணவை (solid food) எவ்வாறு அறிமுகப்படுத்துகிறீர்கள் என்பதை விளக்குக.

(03 புள்ளிகள்)

iii). ஆக்கப்பூர்வமான அல்லது கல்வி சார்ந்த பொம்மைகள் மற்றும் கேம்களை (toys and games) நீங்கள் எவ்வாறு வழங்குகிறீர்கள் என்பதைப் பட்டியலிடுக.

(03 புள்ளிகள்)

iv). கழிப்பறை பயிற்சிக்கு (toilet training) மிகவும் பொருத்தமான வயதைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

6.

i). பின்வரும் தலைப்புகளின்படி வயதானவரின் பிரச்சனைகளை பட்டியலிடுக.

a) உடல் மாற்றங்கள் (Physical changes)

(02 புள்ளிகள்)

b) மன மாற்றங்கள் (Mental changes)

(02 புள்ளிகள்)

c) சமூக மாற்றங்கள் (Social changes)

(02 புள்ளிகள்)

ii). வயதானவர்களுக்கு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் (recreational activities) ஏன் முக்கியம் என்பதைக் குறிப்பிடுக.

(01 புள்ளி)

iii). மரணிக்கும் நோயாளி மற்றும் மரணம் (dying patient and death) பற்றிய கவனிப்பைக் குறிப்பிடுக.

a) மரணிக்கும் நோயாளி (Dying patient)

(1.5 புள்ளிகள்)

b) மரணத்திற்குப் பின் (After death)

(1.5 புள்ளிகள்)